Journal of Valartamil, eISSN 2716-5507
Volume 6, No.2, 2025, (35-44)

# பண்டைய தமிழிலக்கியங்களில் மனித நேயமும் உயிர் நேயமும்

# Humanism and Compassion for Living Beings in Ancient Tamil Literature

**Manonmani Devi M.A.R Annamalai**

Department of Modern Language, Faculty of Languages and Communication,
Universiti Pendidikan Sultan Idris, 35900 Tanjong Malim, Perak, Malaysia

**Navin G Ganeson**

Postgraduate Student (Master of Education),
Universiti Pendidikan Sultan Idris, 35900 Tanjong Malim, Perak, Malaysia

email: manonmanidevi@fbk.upsi.edu.my

**Corresponding author:* Navin G Ganeson

**Received:** 17 Oct 2025; **Revised:** 15 Nov 2025; **Accepted:** 08 Dec 2025; **Published:** 15 Dec 2025

**To cite this article (APA):** Manonmani Devi, M. A., & G Ganeson, N. (2025). Humanism and Compassion for Living Beings in Ancient Tamil Literature. *Journal of Valartamil*, *6*(2), 35-44. https://doi.org/10.37134/jvt.vol6.2.4.2025

## ஆய்வுச் சுருக்கம்

பண்டைய தமிழ் இலக்கியம் என்பது சங்க காலம் இலக்கியத்தையே குறிக்கின்றது. பண்டைய இலக்கியம் என்பது தமிழில் எழுதப்பட்ட செவ்வியில் இலக்கியங்களாகும். அதிலும், சங்க கால இலக்கியம் தற்போது கண்டுபிடிக்கப்பட்டவரை 473 புலவர்களால் எழுதப்பட்ட 2381 பாடல்களைக் கொண்டுள்ளன என்று கூறப்படுகிறது. அகமும் புறமும் எனச் சங்க இலக்கியத்தை இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். இதன் அடிப்படையில், சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள மனித நேயத்தையும் உயிர் நேயத்தையும் ஆய்வு செய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வு, பண்புசார் அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வுக்கான தரவுகள் நூலக ஆய்வு அணுகுமுறையில் கையாளப்பட்டுள்ளது. இவ்வகை நூலக ஆய்விற்கு ஏற்புடைய நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி விளக்கவியல் அணுகுமுறையில் இவ்வாய்வு

மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் வழி சங்க இலக்கியத்தில் பல பாடல்கள் மனித நேயத்தையும் உயிர் நேயத்தையும் வெளிப்படுத்தியுள்ளமையை அறிந்து கொள்ள முடிகிறது.

**கருச்சொற்கள்:** பண்டைய தமிழிலக்கியம், மனித நேயம், உயிர் நேயம்

**Abstract:** Sangam literature is the Classic literature written in Tamil. The literature of the Sangam period discovered so far is said to consist of 2381 poems written by 473 poets. The Sangha literature can be divided into two major categories 'Agam' and 'Puram'. Based on this, the purpose of this study is to examine humanism and bioethics in Sangam literature. This study was carried out in a qualitative approach. The data for this review was handled in a library research approach. This research has been carried out in a descriptive approach using books, research articles, etc. suitable for this type of library research. Through this study it is possible to know that many songs in Sangam literature have expressed humanity and apart from humans, love for other beings can also be seen.

**Keywords:** ancient Tamil Literature, Humanity, 'Uyir Neyam'

## முன்னுரை

பண்டைய தமிழ் இலக்கியம் என்பது சங்க காலம் இலக்கியத்தையே குறிக்கின்றது (Yogambikai, 2023). சங்க இலக்கியத்தில் 'சங்கம்' என்று குறிக்கப்படும் சொல், அறிஞர் அறவோர் பலர் கூடி அமைக்கும் அமைப்பைக் குறிப்பதாகும். சங்கம் வைத்து இலக்கியம் வளர்த்ததையும் படைத்ததையும் அச்சொல் குறிக்கின்றது எனலாம். சங்க இலக்கியம் உள்ள பாட்டுகளின் காலம் கி.மு. 500 முதல் கி.பி 100 வரையில் என்று கூறப்பட்டுள்ளது. (Varadarasan, 2015). சங்க இலக்கியம் அகத்திணையும் புறத்திணையும் என்று இரண்டாகச் சங்க இலக்கியத்தைப் பிரிக்கலாம். சிலர், எடுத்துத்தொகையும் பத்துப்பாட்டும் என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கின்றனர். பண்டைய தமிழகர்களின் காதல், வீரம், அறம், கொடை, ஆட்சியமைப்பு, அரசியல், கல்வி, விருந்தோம்பல், நட்பு, வணிகம் என வாழ்க்கை விழுமியங்களைச் சங்க இலக்கியங்கள் பறைச்சாற்றுகின்றன (Uthajalatha & Visakaruban, 2023). மேலும், 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களான சி. வை. தாமோதிரம்பிள்ளை, உ. வே. சாமிநாதையர் ஆகியோர் முயற்சியினால் சங்க இலக்கியங்கள் நூல்களாக அச்சாக்கப்பட்டன என்று நம்பப்படுகிறது. சங்க இலக்கியப் புலவர்களின் தமிழர்களின் பண்பாட்டினையும் மரபினையும் பாடல்தோறும் தெரிந்தும் தெரியாமலும் வைத்துள்ளனர். இதனால், தமிழர்களின் மரபுகளும் பழக்க வழக்கங்களும் தெளிவாகச் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன(Subramaniam, 2020).

மனிதநேயம் என்பது ஒரு மனிதனுக்கு மற்றொரு மனிதன் மீது ஏற்படும் அன்பு, இரக்கம், கருணை, அருள், அரவணைப்பு என்று கூறலாம். உயிர்நேயம் என்பது குறிப்பாக ஒரு மனிதன் மனிதனைத்

தவிர்த்து மற்ற உயிர்களான விலங்குகள், தாவரங்கள், உயிரற்ற பொருள்கள் ஆகிய மீது காட்டும் அன்பு, இரக்கம், கருணை, அருள், அரவணைப்புப் பற்றிக் குறிக்கின்றது (Darshan, 2023). அத்தகைய, மனித நேயத்தையும் உயிர் நேயத்தையும் பண்டைய தமிழிலக்கியங்களில் ஆராய்வதே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும்.

## ஆய்வு நெறிமுறை

இவ்வாய்வுப் பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கவியல் அணுகுமுறையில் தரவுகள் விளக்கப்பட்டுள்ளன.

## தரவுப் பகுப்பாய்வு
## பண்டைய தமிழிலக்கியத்தில் மனித நேயம்

மனிதர்களின் நற்பண்புகளின் மூலமாகவே ஒரு மனிதனின் மனித நேயத்தை அளவிடலாம். மனித நேயம், கருணைக்காட்டுவது, நன்றியுணர்ச்சி, நன்றி மறவாமை, உண்மை, நேர்மை, ஒழுக்கம், சகிப்புத்தன்மை, பொறுமை, புரிந்துணர்வு போன்ற எண்ணற்ற குணங்களின் மூலம் வரைப்படுத்த முடிகின்றது. மேலும், இதுப்போன்ற மனித நேயத்தைப் பற்றிச் சங்க இலக்கியங்களிலும் காண முடிகின்றது. இன்று உலகமெங்கும் மனிதப் பற்றானது பார்மீது பரவியிருந்தாலும், மனித உள்ளங்களிலும் மனிதநேயமானது புத்துயிர் கொண்டாலும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் சங்க இலக்கியங்களில் மனிதநேய அறக்கருத்துகளையும் சிந்தனைகளையும் விதைத்து விட்டுச் சென்றுள்ளனர்.

சங்கப் புலவர்கள், மன்னர்களுக்கும் மக்களுக்கும் மனிதநேயத்தைப் போதிக்கும் பாலமாக அமைந்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

> உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
> அமிழ்தம் இயைவ தாயினும், இனிதுஎனத்
> தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
> துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சிப்
> புகழ்எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
> உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
> அன்ன மாட்சி அனைய ராகித்
> தமக்கென முயலா நோன்தாள்
> பிறர்க்கென முயலுநர் உண்மை யானே
>
> [புறநானூறு, பா. 182]

என்ற பாடல் புறநானூற்றில் 182 வது பாடலாக இடம்பெற்றுள்ளது. இப்பாடலைப் பாடியவர் கடலுள் மாய்ந்த இளம்பெரு வழுதி என்ற புலவராவர். தனக்கென முயலாமல் பிறருக்கு உதவுதற்காக முயலும் மிகப்பெரும் மனம் உடையவர் வாழ்வதால்தான் இந்த உலகம் வாழ்கிறது என்று இப்பாடல் உணர்த்துகிறது. அத்தகைய மனம் உள்ளவர்கள் இந்திரனின் உலகத்து அமுதமே கிடைத்தாலும் தான் மட்டும் உண்ணமாட்டார்கள்; உலகில் உள்ள யாரையும் வெறுக்க மாட்டார்கள்; பிறர் அஞ்சி ஒதுங்கும் நற்பணிகளைச் செய்யவும் தயங்கமாட்டார்கள்; புகழ் வரும் என்றால் தன் உயிரைக் கொடுப்பார்கள்; பழி வரும் என்றால் உலகையே ஈடாகச் சேர்த்துக் கொடுத்தலும் செய்யமாட்டார்கள். இத்தகைய குணம் உள்ள மனிதர்கள் வாழ்வதால்தான் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. இப்பாடல் வழி, சங்க இலக்கியக் காலங்களில் தமிழர்கள் தனக்காக வாழாமல் பிறருக்காக வாழும் பொதுநலம் கருதி மனித நேயத்துடன் வாழ்ந்துள்ளனர் என்பதை உணர முடிகின்றது. இந்தக் கருத்தினை,

> பண்புடையார் பட்டுண் டுலகம்; அதுஇன்றேல்
> மண்புக்கு மாய்வது மன்
>
> [திருக்குறள், குறள் 996]

என்ற திருக்குறளும் நமக்கு உணர்த்துகிறது. அதாவது, பிறருக்கு நல்லது எண்ணி வாழ்பவராலே இந்த உலகம் உள்ளப்படி இயங்குகின்றது. இல்லையென்றால், என்றோ இந்தோ உலகம் மண்ணில் புகுந்து அழிந்திருக்கக் கூடும். மேற்காணும் சங்கப் பாடலில் காணப்படும் மனித நேயக் கருத்தையொட்டி வள்ளுவரும் தமது குறளில் மனித நேயக் கருத்தினை மனிதருக்குக் கூறியுள்ளார் என்பதைக் காண முடிகின்றது.

அதனை அடுத்து,

> யாதும் ஊரே; யாவரும் கேளிர்;
> தீதும் நன்றும் பிறர்தர வாரா;
> நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன;
> சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
> இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்,
> இன்னா தென்றலும் இலமே மின்னொடு
> வானம் தண்துளி தலைஇ, ஆனாது
> கல்பொருது இரங்கும் மல்லற் பேர்யாற்று
> நீர்வழிப் படூஉம் புணைபோல், ஆருயிர்
> முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
> காட்சியின் தெளிந்தனம் ஆகலின் மாட்சியின்
> பெரியோரை வியத்தலும் இலமே;
> சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.
>
> [புறநானூறு, பா. 192]

என்பது புறநானூற்றில் 192வது பாடலாக இடம்பெற்றுள்ளது. இப்பாடலைப் பாடியவர் கணியன் பூங்குன்றனார் என்ற புலவராவர். எல்லா ஊரும் என்னுடைய ஊர், எல்லா மக்களும் என்னுடைய உறவினரே என்று இப்பாடலின் வரி பொது கருத்தின் வழி மனித நேயத்தை உணர்த்துகிறது. நமக்கு ஒரு தீங்கு ஏற்பட்டாலும் நன்மை ஏற்பட்டாலும் அதற்கு நாம்தான் காரணம் என்று அறிய வேண்டும் என்று உணர்த்துகிறது. எனவே, நமக்குத் தீங்கு நடப்பதற்கு மற்றவர்களைக் குற்றம் சாடல், வஞ்சிப்பது, பழி வாங்குவது போன்ற தீய எண்ணங்களை மற்ற மனிதன் மீது காட்ட கூடாது என்ற உயர்ந்த மனித நேயத்தைப் புலவர் இப்பாடலில் கூறியுள்ளார். நமக்குத் துன்பமோ; இன்பமோ; நல்லதோ கெட்டதோ நம்மால் என்று ஏற்றுக் கொண்டு மற்ற உயிர்களிடத்தில் அன்பு செலுத்தி வாழ வேண்டும் என்ற தத்துவத்தையும் உயர்ந்த பண்புயையும் புலப்படுத்துகிறது, இப்பாடல்.

*தொடர்ந்து, சக மனிதர்களுக்குக் கெடுதல் நினைக்காமல் அவர்கள் துன்பத்தில் பங்குகொண்டு தானும் வருந்தி அவர்களுக்கு, நன்மை செய்வது மனிதநேயமாகும். இதனை,*

*பல்சான் றீரே! பல்சான் றீரே!*
*கயல்முள் அன்ன நரைமுதிர் திரைகவுள்*
*பயனில் மூப்பின் பல்சான் றீரே!*
*கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்*
*பிணிக்கும் காலை இரங்குவிர் மாதோ!*
*நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்,*
*அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்*
*எல்லாரும் உவப்பது; அன்றியும்*
*நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே!*
*[புறநானூறு, பாடல் 195]*

என்ற பாடல் வழி நரிவெரூஉ தலையார் கூறுகிறார். இப்பாடல், இன்னொருவர் மற்ற மனித உயிர்களுக்கு நன்மைகள் செய்யாமல் போனாலும் தீமைகளைச் செய்யாமல் இருக்க வேண்டும் என்ற மனித நேயச் சிந்தனையை வெளிப்படுத்துகின்றது. அத்தகைய பண்பே மனிதர்களுக்கு அழகு என்றும் அது நெறியான வாழ்க்கை வாழ்வதற்குப் பயன்படும் என்று கூறுகிறார், புலவர். ஆக, மற்றவர்களுக்குத் தீமை செய்யாமல் அவர்களுக்கு நல்லது செய்து நல்ல முறையில் அனைவரோடும் இணைந்து அன்போடு வாழ வேண்டும் என்ற மனித நேயத்தை இப்பாடல் காட்டுகின்றது.

‘வைகு புலர் விடியல் மெய் கரந்து, தன் கால்
அரி அமை சிலம்பு கழீஇ, பல் மாண்
வரி புனை பந்தொடு வைஇய செல்வோள்,
''இவை காண்தோறும் நோவர் மாதோ;
அளியரோ அளியர் என் ஆயத்தோர்!'' என
நும்மொடு வரவு தான் அயரவும்,
தன் வரைத்து அன்றியும் கலுழ்ந்தன கண்ணே’
[நற்றிணை, பாடல் 12]

மேற்காணும் பாடல், தலைவி தன் உறவினர்களிடமும் தோழிகளிடமும் வைத்திருந்த அன்பு அவளுக்கு அவர்கள் மீதான மனித நேயத்தைச் சுட்டுகின்றது. இப்பாடல், தன் தலைவனோடு காதல் கொண்டு உடன் போக்குச் செல்ல துணிந்த போது நாளை விடிந்தால் என்னைப் பெற்றோர்களும் உறவினர்களும் தோழிகளும் நான் உடன் போக்கு சென்றதை எண்ணி வருந்தித் துன்பதிற்கு உள்ளாவர்கள் என்று எண்ணி கவலை படுகிறாள்; கவலை பட்டதோடு நிற்காமல் தலைவனோடு உடன் போக்குச் செல்வதையும் தவிர்த்து விட்டாள், தலைவி. எத்துணை பெரிய மனித நேயச் சிந்தனை. மற்றவர்கள் மனம் நோகும் என எண்ணி தான் விருப்பப்பட்ட வாழ்க்கையும் தியாகம் செய்ய துணிந்த தலைவியின் அன்பு மனித நேயத்தை எடுத்துரைக்கின்றது.

'............................ மால் வரைக்  
கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி   100  
அமிழ்து விளை தீம் கனி ஔவைக்கு ஈந்த,  
உரவுச் சினம் கனலும் ஒளி திகழ் நெடுவேல்  
அரவக்கடல் தானை அதிகனும்'  
[சிறுபாணற்றுப்படை, அடி 99-103]

மேற்காணும் பாடல் அதிகன் என்ற அதியமான் மன்னனைப் பற்றிய பாடலாகும். ஒருநாள் வேட்டைக்கு அதிகன் காட்டிற்குச் சென்ற போது, அங்குள்ள நெல்லி மரத்தில் ஒரே ஒரு பழம் மட்டும் தொங்கிக் கொண்டிருந்தது. அதைப் பறித்து நாட்டிற்குத் திரும்பினான், அதிகன். பின், அந்தப் பழத்தை உண்பவர் நீண்ட நாள் உயிர் வாழ்வார் என்று அறிந்து கொள்கிறார். அந்தச் சிறப்புத் தன்மை வாய்ந்த நெல்லிப் பழத்தைத் தான் உண்ணாமல் ஔவைக்குத் தருகிறான், அதிகன். பழத்தை உண்டால் நீண்ட நாள் வாழ்வோம் என்றால் ஆசை பட்டு நாம் தான் முதலில் உண்ண நினைப்போம். ஆனால், அதிகன் அப்படிச் செய்யாமல் அந்தப் பழத்தை இன்னொருவருக்குக் கொடுத்த உயர்ந்த பண்பு ஒட்டுமொத்த தமிழர்களின் மனித நேயத்தைப் பறைச்சாற்றுகின்றது.

## பண்டைய தமிழிலக்கியத்தில் உயிர் நேயம்

மனிதன் இன்னொரு மனிதனை நேசித்து வாழும் வாழ்க்கையை மனித நேயம் என்று குறிப்பிடுகிறோம். அஃதாவது, ஒரு மனிதன் சக மனிதனின் துன்பத்தில் பங்கெடுத்து, அதைப் போக்கி வாழ்வதை மனித நேயம் என்கிறோம். இதற்கும் அப்பால், இப்புவியில் உள்ள அனைத்து உயிர்களிடமும் அன்பு காட்டியும் எல்லா உயிர்களின் துன்பங்களையும் போக்கும் பண்பு, உயிர் நேயம் ஆகும். இன்றும் பெருமளவில், அனைவரும் நினைவில் மறக்காமல் நிற்பது முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி எனலாம். பெரிய வள்ளல் போற்றப்பட்ட பாரிவள்ளல் மனிதனிடம் மட்டுமா அன்பு காட்டினான்;

முல்லை கொடிப் படரத் தன் தேரையே கொடுத்துவிட்டு வந்தான். இஃது ஒரு தாவரத்தின் மீது அவர் காட்டிய உயிர் நேயமாகும். இதனை,

'..............சுரும்பு உண
நறு வீ உறைக்கும் நாக நெடு வழிச்
சிறு வீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்கு வெள்ளருவி வீழும் சாரல்
பறம்பின் கோமான் பாரியும்'
[சிறுபாணற்றுப்படை, அடி 87 – 91]

என்ற பாடல் காட்டுகின்றது. அடுத்து,

'..................................................
குரங்கு உளைப் பொலிந்த கொய்சுவற் புரவி,
நரம்பு ஆர்த்தன்ன, வாங்கு வள்பு அரிய,
பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாது உண் பறவை பேதுறல் அஞ்சி,
மணி நா யாத்த மாண் வினைத் தேரன்,
..................................................'
[அகநானூறு, பா. 4]

என்ற பாடலும் உயிர் நேயத்தை விளக்குகின்றது. பூக்கள் பூத்துக் குலுங்கியிருந்த சோலையில் வண்டினங்கள் தம் துணையொடு அங்குள்ள பூக்களில் தேனில் திளைத்துக் கொண்டிருந்த போது, மணியொலிக் கேட்டுப் பயந்து, கலைந்து சென்றுவிடுமோ என்று கருணையோடு தலைவன் எண்ணுவதைக் காட்டுகின்றது. பிறகு, தலைவன் தனது தேரில் உள்ள மணிகளின் நாவை ஒலிக்காத வண்ணம் கட்டி தேரைச் செலுத்தினான். பலநாள் பிரிந்தும், துயரில் வாடும் தன் தலைவியைக் காண விரைந்து செல்லும் வேளையிலும், வண்டின் மகிழ்வைச் சிதைத்துவிடாத தலைவனின் உள்ளம் சங்கக்காலத் தமிழர்களின் உயர்ந்த உயிர் நேயத்தைக் குறிப்பிடுகின்றது.
மனிதன் விலங்கிற்கு அன்பு செய்வது தாண்டி, விலங்குகள் ஒன்றிற்கு ஒன்று அன்பு செலுத்துவதாகவும் தமிழர்கள் இலக்கியத்தில் குறிப்பிட்டுள்ளனர். இதனை,

'..................................................
அடிதாங்கும் அளவின்றி, அழலன்ன வெம்மையால்,
கடியவே' கனங்குழாஅய்! காடென்றார்; 'அக்காட்டுள்,
துடிஅடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடிஊட்டி, பின்உண்ணும், களிறு'எனவும் உரைத்தனரே

என்ற பாடல், பாலை நிலக் காட்டில் தெளிவாக இருந்த சிறிது நீரையும் யானை குட்டிக் கலக்கிய அந்நீரைப் பெண் யானைக்கு ஊட்டிய பின்பு மீதமுள்ளதை ஆண் யானை பருகும் என்று பாடல் உணர்த்துகிறது. அடுத்து,

'..................................................
இன்பத்தின் இகந்துஒரீஇ, இலைதீந்த உலவையால்,
துன்புறூஉம் தகையவே காடு' என்றார்; 'அக் காட்டுள்,
அன்பு கொள் மடப் பெடை அசைஇய வருத்தத்தை

மென் சிறகரால் ஆற்றும், புறவு' எனவும் உரைத்தனரே

என்ற வரிகள், பாலை நிலத்தில் உள்ள அந்தக் காட்டில் வெப்பம் தாங்காமல் துன்பம் உற்றிருக்கும் தன் இணையான பெண் புறாவை, ஆண் புறா தன் மென்மையான சிறகுகளால் விசிறிக் கொடுக்கும் செய்தியைப் புலவர் வெளிப்படுத்துகின்றார். மேலும் அதே பாடலில்,

'.....................................................................................................
'கல் மிசை வேய் வாடக் கனை கதிர் தெறுதலான்,
துன்னரூஉம் தகையவே காடு' என்றார்; 'அக் காட்டுள்,
இன் நிழல் இன்மையான் வருந்திய மடப் பிணைக்குத்
*தன் நிழலைக் கொடுத்து அளிக்கும், கலை'*
*எனவும் உரைத்தனரே*
.............................................................................................................'

*[கலித்தொகை, பா. 11]*

என்ற வரிகளும், பாலை நிலத்தில் மலைமேல் வளரும் மூங்கில்கள் வாடி வறண்டு போகும் அளவிற்கு வெப்பம் நம்மை வாட்டி எடுக்கும்; அக்காட்டில் நிழல் இல்லாமல் வருந்தும் பெண்மானுக்கு அதன் ஆண்மான் தன் உடலின் நிழலைத் தந்து வெப்பத்தில் இருந்து காப்பாற்றும் என்று உணர்த்துகிறது. மேற்கூறப்பட்ட மூன்று நிலைகளும் மனிதன் விலங்குகளைக் கொண்டு உயிர் நேயத்தைக் கற்றுத் தருகின்றான். விலங்கினங்களை அன்பினால் உற்று நோக்கி வளர்த்து வந்திருந்தால் மட்டுமே அதன் உணர்ச்சிகளையும் சங்க இலக்கியத்தில் காண்பிக்க இயலும். இப்பாடலின் வாயிலாகப் பண்டைய தமிழர்கள் விலங்குகளின் மூலம் உள்ள உயர்ந்த உயிர் நேயத்தைக் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது.

அடுத்ததாக, அகநானூற்றுப் பாடல்களிலும் உயிர் நேயம் இருப்பதை அறியமுடிகிறது. இதனை,

'..................................................
வாஅப் பாணி வயங்கு தொழிற் கலிமாத்
தாஅத் தாள் இணை மெல்ல ஒதுங்க,
இடி மறந்து, ஏமதி வலவ! குவிமுகை
வாழை வான் பூ ஊழுறுபு உதிர்ந்த
ஒழிகுலை அன்ன திரிமருப்பு ஏற்றொடு
கணைக் கால் அம் பிணைக் காமர் புணர் நிலை
கடுமான் தேர் ஒலி கேட்பின்,
நடுநாட் கூட்டம் ஆகலும் உண்டே'

[அகநானூறு, பா. 134]

என்ற பாடலில் காணலாம். தலைவன் பிரிந்திருந்த காதலியைக் காண விரைந்து செல்லும் வழியில், ஆண்மானும் பெண்மானும் கூடி

மகிழந்துருப்பதைக் காண்கிறான், தலைவன். குதிரை ஓடும் வேகத்தில் தேர் மணிகளின் ஒலியினால் அந்த மான்களின் கூடல் கலைந்து விடுமோ என்று பயந்து தேரோட்டியிடம் குதிரையை வேகமாக ஓட்டாமல் மெல்ல நடத்திச் செல் என்கிறார், தலைவன். மானின் புணர்தல் கலைந்து அதனின் இன்பத்தில் இடையூறு ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காகத் தேரை நிறுத்தி அவ்விலங்குகளின் மீது அன்புக் காட்டும் தலைவனின் உயர்ந்த நெறியான உயிர் நேயத்தை இப்பாடல் இயம்புகின்றது. ஆக இப்பாடல், சங்கக் காலத்தில் மனிதர்கள் விலங்குகள் மீது வெளிப்படுத்திய உயிர் நேயத்தைச் சுட்டுகின்றது.

*பத்துப்பாட்டு நூலான சிறுபாணாற்றுப்படை நூலிலும் உயிர் நேயம் வெளிப்பட்டுள்ளது. இதனை,*

*'.................................................
வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகனும்'
[சிறுபாணாற்றுப்படை, அடி 84-87]*

என்ற பாடலில் கடையெழு வள்ளல்களில் ஒருவரான பேகன் மன்னனைப் பற்றிப் பாடுகிறது. இப்பாடல், மழை நிற்காமல் பெய்யும் வளமுடை மலைநாட்டில் ஒரு நாள் மயில் அகவியது. தொடர்ந்து, மழை பெய்ததால் குளிர் ஏற்பட்டு அகவுகிறது என எண்ணி, காட்டுக்குச் சென்று அந்த மயிலுக்குத் தன் போர்வை தந்து மயிலின் துன்பத்தைப் போக்கினான், பேகன். இந்தக் கொடையாலே பேகன் மக்களிடையே நிலைத்த புகழ் கொண்டான். ஒரு காட்டு மயில் குளிரில் வாடுகிறது என்று இரவு என்று பாராமல் சென்று தன் போர்வையைப் போர்த்தி அதன் துன்பத்தை நீக்கிய அன்பு உள்ளம் தலைசிறந்த உயிர் நேயத்தைக் காண்பிக்கின்றது. இதே விடயத்தை,

'மடத்தகை மாமயில் பனிக்கும்என்று அருளிப்
படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
.................................................'
[புறநானூறு, பா. 145]

என்ற புறநானூறு பாடலும் பேகனின் மயிலுக்குப் போர்வை தந்த பேகனைப் பற்றிப் பாடுகிறது. ஆகவே, ஒரு பறவையின் துன்பத்தைப் போக்கிய தமிழரின் பண்பு உயர்ந்த உயிர் நேயத்தைக் காட்டுகின்றது.

பருந்து ஒன்றிடம் இருந்து தப்பி தன்னிடம் தஞ்சம் புகுந்த புறாவைக் காப்பற்றி அந்தப் புறாவின் எடைக்கு ஈடாகத் தனது தசையை அறுத்துப் பருந்திற்கு உணவளித்து, மன்னன் சிபி உலகில் உயிர் நேயத்தைக் காத்துள்ளார். இதனை,

'கூர் உகிர்ப் பருந்தின் ஏறு குறித்து, ஒரீஇ,
தன் அகம் புக்க குறு நடைப் புறவின்
தபுதி அஞ்சிச் சீரை புக்க

வரையா ஈகை உரவோன் மருக!'
[புறநானூறு, பா. 43]

எனும் பாடல் வழி காணலாம். இங்கு இரண்டு வகையாக உயிர் நேயம் வெளிப்பட்டுள்ளதைக் காணலாம். முதலில், பருந்திடம் இருந்து புறாவைக் காப்பாற்றி அதன் துன்பத்தைத் தீர்த்த போது அங்கு உயிர் நேயம் வெளிப்படுகிறது. அடுத்து, பசியோடு வந்த பருந்தின் பசியை அறிந்து அதற்கும் பசியைப் போக்கிய போதும் அங்கு உயிர் நேயம் வெளிப்பட்டுள்ளது.

## முடிவுரை

பண்டைய தமிழிலக்கியம் மனிதர்களைப் பாடுகிறது. மனிதர்களுக்காகாவே மனித நேயத்தை அன்றும் இன்றும் என்றும் இன்றியமையாததாக உள்ளது என்பதை மேற்காணும் சில பாடல்கள் புலப்படுத்துகின்றது. சுயநலம் கருதாமல் பிறர்நலம் கருதி வாழும் மனிதனே மனிதனாவன் என்பதைச் சங்கப் பாடல்கள் எடுத்துரைக்கின்றது. மேலும், இவ்வாறு சங்ககால மக்கள் தன்னலமின்றி மனித நேயத்துடன் வாழ்ந்து வந்ததைக் குறிப்பிட்ட ஓரிரு சில பாடல்களே உறுதிப்படுத்திவிட்டன. அதுமட்டுமில்லாமல், மனிதனிடம் காட்டும் மனித நேயத்தைக் காட்டிலும், மேலாக மனிதரல்லாத அனைத்து உயிர்களிடமும் அன்பு காட்டுதலையும், பிற உயிரனங்கள் ஒன்று மற்றொன்றிடம் காட்டும் அன்பையும் உயிர் நேயம் என்ற உன்னதமான பண்பைப் பண்டைய தமிழர்கள் சங்க இலக்கியத்தில் வலியுறுத்தியுள்ளனர். உலகில் உள்ள அனைத்து உயிர்களையும் நேசித்து, துன்பம் நேரிடும் போதும் அதனைப் போக்கியும் காத்தும் நம்மிடம் உள்ள உயிர் நேயத்தையும் மனித நேயத்தையும் மேம்படச் செய்ய வேண்டும்.

## துணைநூற்பட்டியல்

Illamurugan, Y. (2023). Monarchy and Tyranny in Ancient Literature. Malaysian Journal of Tamil, 176-183.
Malathi. (2019). Sanga Ilakkiya Natrinaiyil Manithaneya Maanbukal. Proceedings of 9th International Symposium (pp. 1471-1475). Oluvil: South Eastern University of Sri Lanka.
Singaravelu. (2014). Thirukkural (Trilingual). Kuala Lumpur: Uma Publications.
Subramanian. (2021). Sanga Ilakiyam - Ettuthokai - Part 2. Chennai: Manivaasagar Publication.
Subramanian. (2021). Sanga Ilakiyam - Ettuthokai - Part 3. Chennai: Manivaasagar Publication.
Subramaniyan. (2021). Sanga Ilakkiyam - Ettuthokai - Part 1. Chennai: Manivaasagar Publication.
Sudaroli. (2019). Kadaiyezhu Vallalkal. Shanlax International Tamil Journal, 116-120.
Varadarasan. (2015). Tamizh Ilakiya Varalaru - History of Tamil Literature. Chennai: Sahitya Akademi.
Uthajalatha, N., & Visakaruban, K. (2023). Sangam Literature – Kurunthogai and Kalithogai: A Comparative Study.
Subramaniam, S. (2020). Niche Thinking in Caṅkam Literature). Journal of Tamil Peraivu, 9(2), 44-56.
Darshan. (2023). Pari's Humanism in Purananuru. Journal of Tamil Culture and Literature, 2(S1), 62–64.
Subramaniam, K. (2020). The Humanism Conveyed in Manimekalai. Journal of Indian Studies, 13, 1–5.